DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 52/2024

| | |
|---|---|
| | Prosecution PW 5 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.ஆர்த்தி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 06.10.2025

**எதிரி ஆஜரில்லை. குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வெங்கமேடு கா.நி உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 3.7.2022 ம் தேதி பசுபதிபாளையம் கா.நி உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பு அலுவலிலிருந்தபோது காலை 8.00 மணிக்கு சக்தி க/பெ.குருசாமி நடுத்தெரு, கணேசபுரம், புலியூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் பெற்று பசுபதிபாளையம் கா.நி. கு.எண்.296/2022 ச/பி 279, 304(A) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின் அசல் முதல் தகவல் அறிக்கையையும், புகாரையும் இணைத்து உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து காலை 8.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான முனியப்பன், பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ

இடம் பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின் சாட்சிகள் முனியப்பன், பாலசுப்பிரமணியன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் கரூர் அரசு மருத்துவமனை சென்று சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் 10.30 மணிமுதல் இவ்வழக்கில் இறந்துபோன குருசாமி என்பவர் பிரேதம் மீது பிரேத விசாரணை மேற்கொண்டேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின் இறப்பின் தன்மை அறியும் பொருட்டு த.கா. 1489 பாலகுமார் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். பிரேத விசாரணை சாட்சிகள் சக்தி, ஹரிபிரசாத், மூக்காயி, முருகேசன், ரமேஷ்குமார் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் முதல் கட்ட விசாரணை முடித்து மேல் விசாரணைக்காக ஆய்வாளர் வசம் வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

விபத்து சம்பந்தமாக மருத்துவமனையிலிருந்து எத்தனை மணிக்கு தகவல் பெற்றேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. பொதுவாக குற்ற சம்பவம் குறித்து மருத்துவமனையிலிருந்து தகவல் வந்தது என்றால் அந்த தகவலானது வழக்கு கோப்பில் இருக்கும் என்று சொன்னால், மருத்துவமனையிலிருந்து வந்த தகவலை பெற்று வழக்கு பதிவு செய்தேன் என்றால் மருத்துவமனையின் தகவல் தொடர்பான குறிப்பு இருக்கும். சம்பவ இடத்திற்கும் மருத்துவமனைக்கும் சுமார் 4 கிமீ தொலைவு இருக்கும். மருத்துவமனைக்கும் காவல்நிலையத்திற்கும் சுமார் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 1-1/2 கிமீ தொலைவு இருக்கும். சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையம் சுமார் 6 கிமீ தொலைவில் உள்ளது. ஒரு வாகனத்தில் வந்தால் சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு சுமார் 10-15 நிமிடங்களில் வந்துவிடலாம் என்றால் சரிதான். சுமார் 10 மணிநேரம் காலதாமதமாக புகார் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமத்திற்கான காரணம் குறித்து நான் எதுவும் விசாரணை செய்யவில்லை.

புகாரில் சம்பவம் குறித்து அளவுகளில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று

சொன்னால் சரிதான். பார்வை மகசர் சாட்சிகள் யாரும் கண்ணுள்ள சாட்சிகள் இல்லை என்று சொன்னால் சரிதான். பார்வை மகசர் சாட்சிகளும் கண்ணுற்ற சாட்சிகளும் சம்பவ இடத்தில் வசிக்கக்கூடிய நபர்களோ அல்லது தொழில் செய்யக்கூடிய நபர்களோ இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடம் அருகிலுள்ள நபர்களை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் விசாரித்தோம் அவர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. சாட்சியம் அளிக்க முன்வராத நபர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் அருகில் குடியிருப்புகள் மற்றும் வணிக கடைகளும் உள்ளன என்றால் சரிதான்.

விபத்து ஏற்படுத்தியதாக சொல்லக்கூடிய வாகனத்தை நான் பார்க்கவில்லை. சம்பவ இடம் கும்கி ஹோட்டலிலிருந்து தென்புறமாக சுமார் 5 அடி தொலைவில் நடந்ததாக உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை யாரால் எந்த தேதியில் அனுப்பி வைக்கப்பட்டது என்றால் 3.7.2022 ம் தேதி என்னால் அனுப்பி வைக்கப்பட்டது. நேரம் ஞாபகம் இல்லை. நீதிமன்றத்திலுள்ள முதல் தகவல் அறிக்கையானது 15.7.2022 ம் தேதி காலை 11.00 மணிக்கு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3.7.2022 ம் தேதியன்றே ஆய்வாளர் மேல்விசாரணைக்கு வைத்தேன். நேரம் குறிப்பிட்டு சொல்ல முடியாது. விபத்திற்குள்ளான வாகனம் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் எந்த பகுதியில் மோதியதாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால் பின்பகுதி என்று குறிப்பிட்டுள்ளார்கள். நான் பின்பகுதியில் எந்த பகுதி மோதியது என்று குறிப்பிட்டு விசாரரணை செய்யவில்லை.

நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், சம்பவ இடத்தை பார்வையிட்டு புகார்தாரரிடம் புகார் தயார் செய்யப்பட்டு கையொப்பம் பெறப்பட்டு வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை வழக்கு பதிவு செய்வதற்கு முன்பாக பார்வையிட்டு அதற்கு தகுந்தாற்போல் புகார் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை

சொன்ன நேரத்தில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றாலும் வழக்கிற்காக கண்ணுற்ற சாட்சிகளாக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. மகசர் சாட்சியாக யாரும் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்யப்படவில்லை என்றாலும் அவர்கள் இறந்தவரின் உறவினர்கள் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**